**செய்தி வெளியீடு** நாள் : 08.02.2025

**வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ், சி.எம்.டி.ஏ சார்பில் திரு.வி.க. நகர் தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் ரூ.18.70 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்தார்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (8.2.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.18.70 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கான பணிகளை துவக்கி வைத்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு மாநகர மக்களுடைய வாழ்வாதாரத்திற்கு ஏற்றார்போல் அவர்களுடைய அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு ஒட்டுமொத்த சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள 22 சட்டமன்ற உறுப்பினர்கள், 4 நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் உத்தரவுகளை பெற்று 2023-2024, 2024-2025 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 192 பணிகளை மேற்கொண்டு அதில் குறிப்பாக வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் சுமார் 28 பணிகளை ரூ.682 கோடி செலவில் திட்டமிடப்பட்டு, அதில் பெரும்பாலான பணிகள் ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மீதம் இருக்கின்ற பணிகளை ஒவ்வொரு பணிகளாக பூமி பூஜையோடு ஆரம்பிக்கின்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக இன்றைக்கு திரு.வி.க.நகர் பகுதியில் 18.70 கோடி ரூபாய் செலவில், இந்த பகுதியிலே வாழ்கின்ற மக்களுடைய ஆதார தேவைகளுக்காக திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு அதிக அளவிற்கு வாடகைக்கு எடுத்து திருமணங்களை நடத்துகின்ற கஷ்டமான சூழல் நிலவுவதால் அதை கருத்தில் கொண்டு, இந்த பகுதியிலே ஒரு அனைத்து வசதிகளுடன் கூடிய திருமண மண்டபத்தை கட்டி, குறைந்த அளவு வாடகையோடு இந்த திருமண மண்டபங்களை வறுமை கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களும் பயன்பெறும்வகையில் அமைய இருக்கின்றது.

குறிப்பாக வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் சுமார் 8 திருமண மண்டபங்கள் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** உத்தரவிற்கு ஏற்ப இன்றைக்கு பணிகள் துவக்க திட்டமிட்டு இருக்கின்றோம். அதில் ஒன்று துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் இருக்கின்ற கொண்டித் தோப்பு பகுதியில் அமைந்திருக்கின்ற இராயபுரம் துறைமுகத்திற்கு இணைத்தார் போல் ஒரு மண்டபமும், வால்டாக்ஸ் சாலையில் துறைமுகத்தில் ஒரு திருமண மண்டபமும், அதே போல் திரு.வி.க. நகர் பகுதியில் சந்திரயோகி சமாதி தெருவில் ஒரு திருமண மண்டபமும் கொன்னூர் நெடுஞ்சாலையில் நம்மாழ்வார்பேட்டையில் ஒரு திருமண மண்டபமும், திருவெற்றியூரில்

காலடிப்பேட்டையில் ஒரு திருமண மண்டபமும், திருவொற்றியூர் மார்க்கெட் பகுதி எண்ணூரில் ஒரு திருமண மண்டபமும், திருவெற்றியூர் பகுதியில் ஒரு திருமண மண்டபம் என்று 8 திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு அதில் ஏழாவது திருமண மண்டமாக இந்த திருமண மண்டபத்திற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி இருக்கின்றோம்.

இந்த பணிகள் அனைத்தையும் எங்களுடைய துறையினுடைய செயலாளர் ஆய்விற்கு வருகை தந்து நேர்த்தியாகவும் மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற அளவில் கட்டப்படுகின்ற கட்டுமானங்கள் ஒரு 50 ஆண்டுகள் சிறப்புமிக்க இருப்பதற்கு உண்டான உறுதி செய்யவும், தொடர் ஆய்விற்கு எங்களுடைய துறையின் செயலாளர் திருமதி. காகர்லா உஷா அவர்களும், மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா ராஜன் அவர்களும், சிஎம்டிஏ துறையின் முதன்மை செயல் அலுவலர் திரு.சிவஞானம் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை துறை ஆணையாளர் திரு.பி.என்.ஸ்ரீதர் அவர்களும், மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.பிரவீன் குமார் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்களும், மண்டல குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ் குமார் அவர்களும் கழகத்துடைய முக்கிய நிர்வாகிகள் தமிழ்வேந்தன், புஷ்பராஜ் போன்றவர்கள் ஒருங்கிணைந்து இந்த பணிகளை விரைவு படுத்தவும் செய்கின்ற கட்டுமானத்திற்கு உதவியாக இருப்பதற்கு பேருதவியாக இருந்து பணிகளைப் புரிந்து வருகிறார்கள். இப்போது இங்கு துவக்கப்பட்ட பணி என்பது இந்த ஆண்டு 2025 இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜாதி வாரி கணக்கெடுப்பிற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும்** தெளிவான விளக்கத்தை தந்திருக்கிறார்கள். ஆங்காங்கே நடக்கின்ற சம்பவங்களுக்கு உறுதியான தீர்ப்பை இந்த ஆட்சி அளிக்கிறது. குற்றங்களின் நிகழ்வுகளை தடுப்பது ஒருபுறம், குற்றங்கள் நிகழாமல் வண்ணம் அதை பராமரிப்பது ஒரு புறம், நடந்த குற்றங்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பெண்களுக்கு அதே போல் விழிப்புணர்வை பாலியல் வன்கொடுமை தாக்கத்தை மக்களுடைய விழிப்புணர்வு அதிகப்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** உத்தரவிட்டுள்ளார். இன்னார் இனியவர் என்று இல்லாமல் நடைபெறுகின்ற தவறுக்கு யார் காரணமாக இருந்தாலும் அவர் மீது உறுதியான நடவடிக்கை எடுக்கின்ற சட்டத்தின் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.ஏ.எஸ்.முருகன், செயற்பொறியாளர் திரு.செந்தில்நாதன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.